Registered as a Newspaper in Ceylon

விலை சத - 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி என் 49

மலர் 7 யாழ்ப்பாணம் குரோதி மாசி 4 ஆம் நாள் ஷவ்வால் பிறை 12 (15-2-65) திங்கட்கிழமை இதழ் 1

நங்கையர் விரும்பும் அழகிய தங்கபபவுண் நகைகளை தயாரிதது அளிபபவர்கள்
விஜயலெட்சுமி ஆபரண மாளிகை
ஓடர் நகைகள் உடனுக்குடன் செய்து தருவோம்.
ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை.

# "இந்திய ஆட்சி மொழிக் கொள்கை மாறக்கூடும்"

— சென்னை முதல்வர்

## விநோபாவின் 3 கொள்கைகளுக்கு முதன்மந்திரி பக்தவத்சலம் ஆதரவு

### ஜனாதிபதி ராதாகிருஷ்ணனின் திருத்தணி இல்லம் தாக்கப்பட்டது

சென்னை, பெப். 14

"முதன் மந்திரிகள் மகாநாட்டில் செய்யப்படும் முடிவை காங்கிரஸ் கட்சிக்குச் சமர்ப்பிக்கப்போவதாய் பிரதமர் சாஸ்திரி அறிவித்திருக்கிறார். இதனால் ஆட்சிமொழிக் கொள்கையில் சில மாறுதல்கள் ஏற்படக்கூடும்என ஊகிக்க இடமுண்டு. எதுவாயினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டது கண்டிக்கத்தக்கது" என தமிழ்நாட்டு முதல்மந்திரி திரு. பக்தவத்சலம் தெரிவித்தார்.

தென்னிந்தியாவில் ஆட்சி மொழி விஷயமாக நடைபெற்ற வன்முறைச் செயல்கள் ஜனநாயக கருத்துக்கு முரணானது என ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் கண்டித்திருக்கிறார்.

"ஆனால் மக்களின் சம்மதத்திற்கேற்ப தீமைகள் இருப்பின் அதைத் தடுப்பது தான் அரசியல் விவேகம். ஜனநாயக அமைப்பில் முடிந்த அளவு மக்கள் சம்மதத்தைப் பெறுவது அவசியம்" என்றும் அவர் கூறினார்.

### விநோபாவை ஆதரிக்கிறேன்

தமிழ்நாட்டில் இப்போது அமைதி ஏற்பட்டு வருவதால் உண்ணாவிரதத்தை நிறுத்துமாறு ஆச்சார்யா விநோபாஜிக்குத், முதன்மந்திரி திரு. பக்திவத்சலம் தந்தி அனுப்பியுள்ளார். விநோபாஜி ஆட்சி மொழி பற்றித் தெரிவித்த கொள்கைகளைத்தாம்பற்றி நிற்பதாயும் அவர் கூறினார்.

### ஜனாதிபதி இல்லம் நாசம்

நேற்று 500 ஆர்ப்பாட்டக்காரர்கள் திருத்தணியில் ஜனாதிபதி ராதாகிருஷ்ணனின் பிறந்த இல்லத்தையும் தாயகத்தையும் நாசப்படுத்தினர். டாக்டர் ராதாகிருஷ்ணனின் படத்தையும் இதர பொருட்களையும் அவர்கள் எரித்தார்கள்.

### 800 சிறுவர்கள் விடுதலை

கிளர்ச்சியில் கைது செய்யப்பட்ட 800 சிறுவர்கள் இன்று விடுதலை செய்யப்பட்டனர். 1 கல்லூரி மாணவர் உட்பட 26 பேர் பின்பு விடுதலை செய்யப்பட்டனர். குறிப்பிட்ட குற்றம் இல்லாதவர்களை விடுதலை செய்யும் விஷயம் நாளை முடிவு செய்யப்படும்.

### ஊர்வலத்துக்கு தடை

சென்னையில் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவற்றுக்கான தடை மேலும் 2 வாரம் நீடிக்கப்பட்டிருக்கிறது. சென்ற மாதம் 31-ந் திகதி இத்தடை விதிக்கப்பட்டது.

சமீபத்தில் 24 ரயில் பெட்டிகள் எரிக்கப்பட்டன. ஈரோடு பகுதியில் ஒரு ரயில் நிலையம் எரிக்கப்பட்டதுடன், மொத்தம் 20 ரயில்வே நிலையங்கள் சேதப்படுத்தப்பட்டன.

ரயில்வேக்கு ஏற்பட்ட சேதத்தைப் பழுதுபார்க்க பல நாட்கள் ஆகும் என்றும் பிரயாணிகளுக்கு இதனால் அதிக கஷ்டம் ஏற்படுமென்றும், அதிகப் பணம் செலவாகுமென்றும் அறிவிக்கப்பட்டது. நேற்று முதல் ஓரளவு ரயில்கள் ஓட ஆரம்பித்தன. மின்சார ரயில்களுக்கு ஏற்பட்ட சேதத்தைப் பழுது பார்க்கவும் பல நாள் ஆகும் என அறிவிக்கப்பட்டது.

இன்று மத்திய அரசாங்க உயர் அதிகாரிகள் தமிழ்நாட்டு நிலைமை பற்றி ஆராய்ந்தனர்.

### இந்திரா

சென்னையிலிருந்து திரும்பிய ஸ்ரீமதி இந்திராகாந்தி பிரதமர் சாஸ்திரியைச் சந்தித்து நிலைமை பற்றி விளக்கினார். பிரதமர் பின் டி. டி. கே.யையும் சந்தித்தார்.

மந்திரி சுப்ரமண்யம் கோவையில் அப்பகுதி எம். பி.க்கள், எம். எல். ஏ.க்களுடன் நிலைமை பற்றிக் கேட்டறிந்தார். பின் மாணவர் பிரதிநிதிகளை அவர்

(6-ம் பக்கம் பார்க்க)

---

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும், காங்கிரஸ் பிரமுகர்களும் வார இறுதியில் கிழக்கு மாகாணம் செல்லவிருக்கின்றனர். வட்டபகுதித் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை அபேட்சகர்களும் தமது பிரசாரக் கூட்டங்களை ஆரம்பித்துள்ளனர். இப்பொழுது நடைபெற்றுவரும் பிரசாரக் கூட்டங்களைக் கவனிக்கும் போது சில கட்சிகள் பரஸ்பரத் தாக்குதலில்மட்டும் ஈடுபட்டிருப்பதனையும் சிலர் தமது கொள்கைகளை விளக்குவதனையும் காணக் கூடியதாக உள்ளது.

---

## 23,000 ரூபா செலவில் 14 கடைகள் நிறுவ முடிவு

### வவனியா நகரசபைக் கூட்டத்தில் இந்திய உயிர்த்தியாகிகளுக்கு அஞ்சலி

வவனியா, ஞாயிறு

வவனியா புதிய பஸ் நிலையத்துக்கருகில் பதினான்கு கடைகளைக் கட்டுவதற்காக வவனியா நகரசபை 23,000 ரூபாவை ஒதுக்கியுள்ளது.

நகரசபையின் விசேஷ கூட்டமொன்று தலைவர் திரு. ம. பொன்னையா தலைமையில் நடைபெற்றபொழுது இது சம்பந்தமான பிரேரணையொன்று கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. பிரேரணை திரு. பொன்னையாவால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வவனியா நகரசபை எல்லைக்குள் 36 பஸ் தரிப்பு இடங்களும் தெரிவுசெய்யப்பட்டு, அதற்கான நடவடிக்கைகளும் உடன் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

### அனுதாபம்

சபைக் கூட்டத்தில் இந்தியாவில் நடைபெற்ற ஹிந்தி எதிர்ப்பு கிளர்ச்சிகளினால் பலியானவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. இதுசம்பந்தமான பிரேரணையொன்றை நகரசபை அங்கத்தவர் திரு. எம். இராமசாமி கொண்டுவந்து பேசுகையில்; இந்தியாவின் தென் பகுதியிலும் மற்றும் சில இடங்களிலும் ஹிந்தி கிளர்ச்சியினால் பலியானவர்கள் அதிகம் என்றும் மொழியைக் காக்க அங்கு மக்கள் உயிர்த் தியாகம் செய்திருக்கிறார்கள் என்றும் கூறினார்.

இந்தப் பிரேரணையை ஆதரித்து தலைவரும் பேசினார். இறுதியில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## இடதுசாரி தலைவர்கள் யாழ்ப்பாண விஜயம்

### தேர்தல் பிரசாரம் சூடுபிடிக்கிறது

நல்லூர், திங்கள்

வட்டபகுதியில் தேர்தல் பிரசாரம் கடந்த வாரம் துரித கட்டத்தை யடைந்தது. இம்மாதம் முடிவுவரை பிரசாரவேகம் உச்சக் கட்டத்திலே தான் இருக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

வடபகுதியில் தேர்தல் களத்தில் போட்டியிடும் சகலகட்சி அபேட்சகர்களையும் ஆதரிக்கும் வகையில் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் தொகுதிக்குத் தொகுதி ஆரம்பமாகிவிட்டன.

தமிழரசுக்கட்சியின் பிரசாரக்கூட்டங்கள் திரு. செ. இராசதுரையின் வடபகுதி விஜயத்தினால் கலகலப்பாகக் காட்சியளித்தன. கூட்டரசாங்கப் பிரமுகர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா வட்டபகுதியில் போட்டியிடும் ஐக்கிய இடதுசாரி அபேட்சகாகளை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டு கூட்டரசாங்கத்தின் செயல்களைப் பற்றி எடுத்துரைத்தார்.

அவரைத்தொடர்ந்து புரட்சிவாத சம சமாஜக்கட்சி அபேட்சகரை ஆதரிக்கும் வகையில் திரு. எட்மண்ட் சமரக்கொடி காங்கேசன் துறைக்கு வந்துள்ளார்.

இவ்வாரத்தில் பீட்டர்கெனமன் திருமதி விவியன் குணவர்த்தன, என். சண்முகதாசன் ஆகியோரும் விஜயஞ் செய்யவிருக்கின்றனர். மாத முடிவில் நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவும் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

இந்நிலையில் தமிழரசுக் கட்சித் தலைவர்களான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வி. நவரத்தினம் ஆகியோர் கிழக்கு மாகாணம் சென்றுள்ளனர்.

---

## அறிவித்தல்

கீரிமலை

ஸ்ரீ நகுலாம்பிகாசமேத நகுலேஸ்வரஸ்வாமி மகோற்சவம்

16-2-65 செவ்வாய்க் கிழமை பகல் கொடியேற்றமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் உற்சவம் நடைபெறும்;

1-3-65 பகல் தேர், இரவு சிவராத்திரி உற்சவம். 2-3-65 உதயம் தீர்த்தம்;

இத்தினங்களில் வண்ணை முத்தமிழ்மணி ஸ்ரீலஸ்ரீ C S S மணிபாகவதர் அவர்களால் தொடர்ச்சியாக பெரியபுராண காதப்பிரசங்கம் நடைபெறும்,

இப்படிக்கு
தி. கு. நகுலேஸ்வரக்குருக்கள்
ஆதீனகர்த்தாவும், மனேஜரும்
1610

---

## யாழ்ப்பாணத்தில் கடும் மழை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் வரட்சிக்குப் பின்னர் மழை பெய்துள்ளது. நேற்றும் நேற்று முன் தினமும் யாழ்ப்பாணப்பகுதியிலும் சுற்றுப்புறங்களிலும் தொடர்ச்சியாக மழை பெய்தது. மாசி மாதத்தில் ஆரம்பித்துள்ள இந்த மழையினால் புகையிலை, வெண்காயச் செய்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுற்றுப்புறங்களில் நேற்று முன் தினம் இரவு கடும்மழைபெய்ததாக அறிவிக்கப்பட்டது.

### மணிவாக்கு

நமது சொந்த சுகத்துக்கும் நம் குடும்பத்தவர் சுகத்துக்காகவுமே நாம் இரவு பகலாகப் பாடுபடுகிறோம். மற்றவர்களை அந்நியர்களாகக் கருதுகிறோம் அவர்களிடம் நமக்கு அன்பில்லை. ஆகவே நமது நோக்கம் குறுகியதாயும், அன்பு சுயநலமானதாயும், நமது காரியங்கள் தூய்மையற்றுமுள்ளன. சுயநலப் பிடியிலிருந்து நாம் விடுதலையடைந்தாலே நமது வாழ்க்கை ஆனந்தமாகும்.

— சுவாமி ராமதாஸ்.

ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna
Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு
மாசி மீ 4 உ (15-2-65)

## ஆங்கிலம்

ஆங்கிலம், இந்தி ஆகிய இருமொழிகளையும் சட்டமூலம் இந்தியாவின் நிரந்தர நிர்வாக மொழிகளாக்குவதற்குத் தாம் முயற்சி எடுக்கப் போவதாகவும், இம்மாதம் 23, 24-ம் திகதிகளில் நடைபெற இருக்கும் முதல்மந்திரிகள் மகாநாட்டிலே பலரது ஆதரவையும் தாம் கோர இருப்பதாகவும் சென்னை முதல்மந்திரி பக்தவத்சலம் சென்னை சட்டசபைக் கூட்டத்தில் அறிவித்துள்ளார். இது சென்னை ராஜ்ய மக்களுக்கு மட்டுமன்றி, இந்தி பேசாத மக்களுக்கும், நாட்டின் ஒற்றுமையை விரும்புபவர்களுக்கும் ஓரளவு ஆதரவளிக்கும்.

சென்ற குடியரசு தினத்தில் இந்தியை மட்டும் அரசாங்க மொழியாக்குவது பற்றி டில்லி தலைமைப்பீடம் கலந்து ஆலோசித்ததாம். அப்போதே சென்னை முதல்வர், இந்தக் கருத்தை வற்புறுத்தி இருக்க வேண்டும். வற்புறுத்தி இருப்பின், தென்னாட்டிலே இவ்வளவு ரகளைகளும் ஏற்படாமலும், உயிர்ச்சேதம், பொருட்சேதம் முதலியவற்றையும் தடுத்திருக்கலாம்.

இந்தி ஆட்சிமொழியாவதை யாரும் எதிர்க்கவில்லை. ஆனால் இதுவரை நிர்வாக மொழியாக இருந்து, இந்திய மக்களனைவரையும் இணைத்து வந்த ஆங்கிலத்தையும் சட்டபூர்வமாக அங்கீகரித்து அதையும் நிர்வாக மொழியாக்க வேண்டுமென்றே கேட்கின்றனர். இந்த மிதமான கோரிக்கைக்கும் செவி சாய்க்க மறுத்ததால் தான் எதிர்ப்புக் கிளர்ச்சிகள் கிளம்பின.

இருபது ஆண்டுகளுக்கு முன் அதாவது இந்தியா சுதந்திரமடைவதற்கு முன் ஆங்கிலம், ஆட்சியாளரின் மொழியாகவும், இந்திய மக்களின் அடிமைத்தனத்துக்கான ஒரு சின்னமாகவும் இருந்து வந்தது. ஆனால் நாடு விடுதலையடைந்ததும் ஆங்கிலமொழியின் நிலைமை அடியோடு மாறிவிட்டது. அது சர்வதேச மொழி இந்திய ராஜ்யங்களையும் மக்களையும் இணைத்து வந்த ஆங்கிலத்தை, நாடு விடுதலைபெற்ற பின்பும் மக்கள் ஆவலுடன் கற்று வருகின்றனர். ஆங்கில மொழிக்கு இந்தியாவிலே எல்லாராஜ்யங்களிலும்கல்வித் திட்டத்தில் இடமளிக்கப்பட்டு, அது பொதுமொழியாக மறைமுகமாக அங்கீகரிக்கப்பட்டும் வருகிறது. அவ்வித பொதுமொழிக்குச் சட்டரீதியான அந்தஸ்து அளிக்க வேண்டுமென்று கேட்பதில் என்ன தவறு? அதை இன்னும் அடிமைச் சின்னமாகக் கருதுவது சரியா?

உலகமெல்லாம் ஒரு குடும்பமென்று இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அடிக்கடி சர்வதேசியம் பேசி வருகின்றார். நேற்று முன்தினம் பின்லந்து தலைவரை வரவேற்றுப் பேசுகையிலும் இதை அவர் வலியுறுத்தியுள்ளார். அவர் பேசியதும் ஆங்கிலத்தில்தான். பின்லந்திலே 7 சதவிகிதத்தினரே பேசும் ஸ்விடிஷ் மொழியும் அங்கு இரு அரசாங்க மொழிகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதை அவர் பாராட்டினார். ஆகவே மொழி விஷயத்திலும் சிறப்பாக ஆங்கிலம்பற்றியும் பழைய குறுகிய எண்ணங்களை விட்டு, புதிய நிலைக்குத்தக்கபடி புனராலோசனை செய்து அதற்குரிய அந்தஸ்தைச் சட்டபூர்வமாக அளிப்பதே அரசியல் ஞானமாகும். அடுத்த வாரத்திலே புதுடில்லியில் கூடும் முதல்மந்திரிகள் மகாநாட்டிலே இவ்வித விரிந்த மனப்பான்மையுடன் நல்ல முடிவு செய்யப்படுமென்றே நம்புகிறோம். அங்கு செய்யும் முடிவு மொழிப்பிரச்னை தீராமல் சங்கடப்படும் இலங்கை முதலிய நாடுகளுக்கும் நல்ல வழி காட்டுவதாக இருக்கும்.

# "ஆற்றல் அறிவு பெறுவது அரிது ஆனால் அவற்றை பயன்படுத்துவதே பெரிது"

## கிருஷ்ணபிள்ளையின் சேவைநலம் பாராட்டுவிழாவில் புலவர்மணி

மாவிட்டபுரம், ஞாயிறு ஆசிரியர்களுடைய சேவை, நோக்கம் என்பன அவர்களுடைய நாட்டைப் பற்றியதாகவும், நாட்டுப் பொருள்கள் மீதாகவும் இருக்கவேண்டும். எதிர்காலத்தில் மக்களை நல்வழிப்படுத்தக் கூடியவர்களாக மாணவர்களை ஆக்குதல் ஆசிரியர் கடமை" என்று புலவர்மணி ஆ. பெரியதம்பிப்பிள்ளை பலாலி ஆசிரியகலாசாலையில் நடைபெற்ற பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை சேவை நலம் பாராட்டுவிழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

### "செந்தமிழ்மணி"

பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. சி. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற பாராட்டுவிழாவில் பண்டிதர் கிருஷ்ணபிள்ளைக்கு புலவர்மணி ஆ. பெரியதம்பிப்பிள்ளை 'செந்தமிழ்மணி' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். புலவர்மணி தொடர்ந்து பேசுகையில் ஆற்றல் அறிவு என்பனவற்றை ஒருவர் பெற்றுக்கொள்வது அரியதன்று என்றும் ஆனால் பண்புடன் அவற்றை மற்றவர்க்கு பயன்படச் செய்வதே மாண்புடையதென்றும் குறிப்பிட்டார்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை சிறப்புரை நிகழ்த்தும்போது செந்தமிழ்மணி கிருஷ்ணபிள்ளையிடம் விவேகானந்தர் பரமஹம்சர் போன்ற மகான்களுடைய நினைவு நிறைய ஊறியிருப்பதாகவும் இவர் இனிமைவாய்ந்தவர் என்றும் குறிப்பிட்டார்.

முன்னாள் துணை வித்தியாதிபதி திரு. க. ச. அருள்நந்தி, கிருஷ்ணபிள்ளைக்கு பொன்னாடை போர்த்தினார்.

செந்தமிழ்மணி கிருஷ்ணபிள்ளை எழுதிய 'இலக்கியச் சோலை' என்னும் நூலை ரசிகமணி கனக. செந்திநாதன் அறிமுகம்செய்து வைத்தார். அவர் பேசுகையில் "படித்ததோடு நின்றுவிடாமல் இன்றுவரை படித்துக்கொண்டிருப்பவர் அவரென்றும் புதுமையான சிறுகதையோ, நாவலோ, கவிதையோ, நாடகமோ அவர் கண்ணுக்குத் தப்புவதில்லை என்றும் எல்லாவற்றையும் அவர் படித்துச் சுவைப்பவர்" என்றும் குறிப்பிட்டார்.

திரு இராஜ அரியரத்தினம் வெளியீட்டுரை நிகழ்த்துகையில் "செந்தமிழ்மணி கிருஷ்ணபிள்ளை எழுத்துலகத்திற்குப் புதியவரல்ல என்றும் தமிழ் மொழிக்குப் பலவகையாலும் சிறப்பான தொண்டினை அவர் செய்துள்ளார்" என்றும் குறிப்பிட்டார்.

வித்துவான் எவ். எக்ஸ். சி. நடராசா, பண்டிதர் கே. சச்சிதானந்தன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்றத்தின் சார்பில் மன்றத் தலைவர் சிவஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் கிருஷ்ணபிள்ளைக்கு மலர்மாலை அணிவித்து பாராட்டுத் தெரிவித்தார். குரும்பசிட்டி சன்மார்க்கசபை, வட-இலங்கை தமிழ்நூல் பதிப்பகம், கிழக்கிலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கம், இலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கம், வரதர் வெளியீடு, பலாலி ஆசிரியர் கழகம் பாராட்டு விழாச்சபை முதலான மன்றங்களும், சங்கங்களும் பாராட்டுத் தெரிவித்தன. பலர் பாராட்டுரை வழங்கினர். திரு. எஸ். சுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. சோ. அமிர்தலிங்கம் நன்றி கூறினார், செந்தமிழ்மணி கிருஷ்ணபிள்ளை தமக்களிக்கப்பட்ட கௌரவத்திற்கும், பாராட்டுக்கும் நன்றி தெரிவித்தார்.

# "புரட்சி சக்திகளுடன் தமிழர்கள் சேரவேண்டும்

## அப்பொழுதான் சிங்களத் தலைவர்கள் பணிந்துவருவர்"

### எட்மண்ட் சமரக்கொடி விளக்கம்

நல்லூர், திங்கள்

"கடந்த பல ஆண்டுகளாக தமிழ்ப்பிரதிநிதிகளால் செய்ய முடியாத சாதிக்கமுடியாத தனை தமிழ்மக்களால் தெரிவு செய்யப்படும் புரட்சிவாத சமசமாஜக்கட்சி அபேட்சகர் ஒரு சில நாட்களுள் சாதிக்க முடியும். தமிழ்பேசும்மக்கள் தென்னிலங்கையில் வகுப்புவாதத்தை எதிர்த்துப் போராடுகின்ற புரட்சிச்சக்திகளுடன் இணையவேண்டும்" என்று புரட்சிவாத சமசமாஜக்கட்சி பொதுக்காரியதரிசி திரு. எட்மண்ட் சமரக்கொடி தெல்லிப்பழையில் நடைபெற்ற தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

காங்கேசன்துறையில்புரட்சிவாத சமசமாஜக்கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் திரு. வி. காராளசிங்கத்தை ஆதரிக்குமுகமாக தெல்லிப்பழை அம்பனைச் சந்திக்கருகில் சட்டக்கல்லூரி மாணவர் திரு. கதிர்காமநாதன் தலைமையில் பிரசாரக்கூட்டம் நடைபெற்றது.

திரு. எட்மண்ட்சமரக்கொடி பேசியதாவது:

இலங்கை சமசமாஜக்கட்சி இலங்கையில் வாழும் இரு சமூகங்களின் நலனுக்காகவும் கடந்த 30 ஆண்டுகளாகப் பாடுபட்டுவந்துள்ளது. கடந்த 30 ஆண்டு காலத்துள் தமிழ் மக்களைப் பாதிக்கக்கூடிய சகல பிரச்னைகளையும் எதிர்த்து வந்துள்ளது.

கூட்டரசாங்கத்தில் சமசமாஜக்கட்சி சேரும்வரை இக்கட்சியின் நடவடிக்கைள் மக்களின் நலனுக்காகவே பாடுபட்டுவந்துள்ளதனைக் காணக்கூடியதாக உள்ளது.

#### தமிழ்மக்களின் நிலை

இலங்கை சுதந்திரமடைந்துவிட்டபோதிலும் இந்த நாட்டில் பாரம்பரியமாக வாழ்ந்துகொண்டிருக்கின்ற தமிழ்மக்கள் மூன்றாந்தரப் பிரஜைகளாக வாழவேண்டியுள்ளது. அந்த நிலைக்கு தமிழ்மக்கள் கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள், இது விசனிக்கத்தக்க கவலைதரும் நிலையாகும்.

கூட்டரசாங்கம் உருவான பின்னும் தமிழ்பேசும் மக்களுடைய பிரச்னைகள் தீர்ந்தபாடில்லை; பதிலாக வளர்ந்து கொண்டே வந்துள்ளது. வேலையில்லாத்திண்டாட்டம் முதலான பிரச்னைகள் விசுவரூபம் எடுத்துள்ளன. கூட்டரசாங்கம் தமிழ்மக்களின் பிரச்னைகளைத் தீர்க்கவேண்டுமென எண்ணம்கொண்டிருக்குமானால் ஏதாவது நடவடிக்கையை மேற்கொண்டிருக்கலாம். கடந்த ஆறு மாதங்களாக கூட்டரசாங்கம் மொழிப்பிரச்னையில் அக்கறை கொண்டுள்ளதாக வெளிப்பார்வைக்காகவாவது காட்டியிருக்கலாம். கூட்டரசாங்கத்திற்கு காலம் போதியதாக இல்லை எனக் கூறுவது தவறு; மொழிப்பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டுமென நினைத்திருந்தால் கூட்டரசாங்கம் 24 மணி நேரத்துக்குள் தகுந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கமுடியும். கூட்டரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு புரட்சிவாதசமசமாஜக்கட்சி உறுப்பினர்களின் எதிர்ப்பே முக்கிய காரணமாகும்.

கடந்த 30 ஆண்டு காலமாக தமிழ்பேசும் மக்கள் இடதுசாரிகளை நிராகரித்து தமிழ்பேசும் மக்களுக்கு மட்டும் உரித்தான தமிழ்த்தலைவர்களைக் கொண்ட தலைமைப் பீடத்தை ஏற்றுக் கொண்

(6ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

நம் இலங்கைக்கு மிக அண்மையிலுள்ள நாடு எது? இரண்டாம் வகுப்பு மாணவர்கூட இந்தியாதான் என்று சொல்லுவாரல்லவா? ஆனால் கொழும்பில் இப்போது நடைபெறும் சர்வதேச கைத்தொழில் காட்சிச் சாலையிலே, இலங்கைக்குப் பக்கத்திலுள்ள நாடு எது தெரியுமா? சீனம்தான்! சீனத்துக்கும் இலங்கைக்கும் அதிகரித்துவரும் புதிய நட்புக்கு இது அறிகுறியா?

சீனத்துக்கு அடுத்தபடியாக போலந்து தேசத்துக் காட்சிக்கூடம் அதன் பிறகே அமெரிக்க, இந்திய காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே எவ்வளவு தூரம்!

* * *

இக்காட்சியிலே என் மனதைப் பெரிதும் கவர்ந்தது சீன தேசத்துக் காட்சிதான். அங்கு முக்கியமான இடத்தில் அரிசியை அழகாகக் குவித்து வைத்திருக்கிறார்கள். அந்த அரிசியைப் பலரும் கூட்டமாகப் போய்ப் பார்க்கிறார்கள்.

நம்மில் அரிசியைப் பார்க்காதவர்கள் யாருமுண்டா? என்றாலும் அந்தச் சர்வ சாதாரண அரிசியை சீனர்கள் ஏதோ அதிசயப் பொருள் போல் இக்காட்சியிலே வைக்கக் காரணமென்ன? நமக்குப் பல வருடங்களாகச் சீனம் அரிசி அளித்துவருகின்றது. அதை நமக்கு நினைப்பூட்டத்தானா அந்த அரிசியை வைத்துள்ளனர்? காரணம் எதுவாயினும் சரி. உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்பது முதுமொழி. அங்கு அரிசிக் குவியலைக் கண்டதும், சீனத்தின்பால் பல நன்றியான எண்ணங்கள் எனக்கு ஏற்பட்டன. நமக்கு இனி அரிசிப் பஞ்சம் ஏற்பட்டாலும், கவலைபடத் தேவையில்லை. கலியுக கர்ணனான சீனம்தான் இருக்கிறதே! பர்மாவிடமோ அல்லது வேறு எங்கோ வாங்கி நமக்குக் கொடுத்து விடுமல்லவா?

* * *

பல்லாண்டுகளுக்கு முன் கொழும்பு நகர மத்தியிலே குதிரைப் பந்தயத் திடலைக் கட்டிய புண்ணியவான்களைப் பாராட்ட வேண்டும். அங்கு சூதாட்டங்கள் நடந்து பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் நாசமாகி இருக்கலாம், என்றாலும் அவர்கள்மட்டும் இந்த நல்ல இடத்தை வாங்கி பராமரிக்காமல் இருந்திருப்பின், இன்று இவ்வித அழகான கண்காட்சி நடைபெற முடியுமா?

முன்னர் கொழும்புத்திட்ட கண்காட்சி விக்டோரியா (விகார மாகதேவி) பார்க்கில் நடந்ததுதான் அந்தக்காட்சியில் என் மனதைவிட்டு அகலாதது இந்தியக் காட்சிக் கூடமாகும். அதிலும் அங்கு போசனசாலையில் நெய்யில் செய்த விதவிதமான இனிப்பு பட்சணங்களை சாப்பிட்டவர்கள் என்றுமே மறக்கமுடியாது. அவ்வித பட்சணங்கள் இந்தமுறை இந்திய காட்சிக்கூடத்தில் இல்லாதது என்னைப்போல் பலருக்கும் ஏமாற்றம். அவ்வித பலகாரக் கடையும், முதல் நம்பர் காப்பியும் இங்கு அளித்திருப்பின் எல்லாக் கூட்டமும் அங்கேயே திரும்பி இருக்கும். என்ன செய்யலாம்.

* * *

இந்தக் காட்சி வைபவங்களைபற்றி எவ்வளவோ எழுத வேண்டும். இதை இன்னும் ஒருமாதத்துக்குள் மூடிவிடப் போவதைக்கேட்டதும் ஒருதாய் மிகவும் வருத்தம் தெரிவித்தார். தலைநகரான கொழும்பிலே, நல்லபொழுது போக்குவதற்கு பொது இடம் அதிகமில்லை என்றும், ஒன்றரைக் கோடி ரூபாய் செலவில் மிக அழகாக அமைத்துள்ள இக்காட்சிசாலையை நிரந்தரமாக வைத்திருக்கவேண்டு

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

மென்றும் விருப்பம் தெரிவித்தார். அந்த அழகான தடாகத்தையும், அதைச் சுற்றியுள்ள வண்ண வண்ண மலர்களையும் விட்டுவிட்டுவர எனக்கும்மனம் வரவில்லை.

* * *

நீதீ நின்னையல்லால் நெறியாதும் நினைந்தறியேன், ஓதீ நான் மறைகள் மறையோன் தலையொன்றினையும், சேதீ சேதமில்லாத் திருவான்மியூருறையும் ஆதீ உன்னையல்லால் அடையாதெனதாதரவே.

— திருஞானசம்பந்தசுவாமிகள்

# தமிழ்நாடு வழமை நிலைக்குத் திரும்பியது

## பஸ், ரயில் சேவைகள் பலஇடங்களிலும்சீரானது

### தலைவர்கள் மகிழ்ச்சி; பாதுகாப்பு நீடிப்பு

சென்னை, பெப். 14

**தமிழ்நாட்டில் நேற்று அசம்பாவிதமான சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை. சென்னையிலும் சுற்றுப்புறங்களிலும் நிலைமை வழமைக்கு வந்துவிட்டதென்று பொலிஸ் கமிஷனின் அறிக்கையொன்று கூறுகிறது. ஆனால் கர்னூர் எனுமிடத்தில் நேற்று சில இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதென்றும் இவர்களைக் கலைக்க பொலிசார் கண்ணீர்ப்புகை பிரயோகித்தனர் என்றும் கிளர்ச்சிக்காரர்கள் அரசாங்க கட்டிடங்களைச் சேதப்படுத்தி தபால்நிலையங்களையும் வன்மையாகத் தாக்கினர் என்றும் சில செய்திகள் கூறுகின்றன.**

**கிளர்ச்சி நின்றது**

கிளர்ச்சியை நிறுத்துமாறு தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து ஹிந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை ஒத்திவைப்பதென்று ஹிந்தி எதிர்ப்பு மாணவர்சபை முடிவு செய்திருந்தது. இதனைத் தொடர்ந்து மூன்றுநாள் உக்கிரமான "போரின்" பின் நேற்று தமிழ்நாட்டிலும் மற்றும் மூன்று ராஜ்யங்களிலும் ஓரளவு அமைதி நிலவியது. அரசாங்கத்தின் மொழிக் கொள்கைகளைக் கண்டித்து இரண்டு மந்திரிகள் ராஜினமா செய்ததே கிளர்ச்சி நிறுத்தத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

**பொலிஸ் காவல்**

நேற்றுக்காலையில் பஸ்கள் சேவையில் ஈடுபட்டன. பஸ்களில் ஆயுதம் தரித்த பொலிசார் காவல் புரிந்தனர். ஆனால் இவர்கள் நேற்றுப் பிற்பகலிலிருந்து அகற்றப்பட்டனர். பஸ்களில் பொலிசாரும் இராணுவத்தினரும் காவலில் இருந்தபொழுது அவர்களுக்கு விசேஷ உத்தரவுகள் வழங்கப்பட்டிருந்தன. பஸ்களை எவரும் சேதப்படுத்தினால் அவர்களைக் கண்ட இடத்தில் சுடும்படி இவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

**நிலைமை வழமையானது**

நேற்று முதல் தமிழ்நாட்டிலும் மற்றும் பகுதிகளிலும் நிலைமை வழமை போலானது. கடைகள் திறக்கப்பட்டிருந்தன. பஸ் போக்குவரத்துகள் தடையின்றி நடைபெற்றன. வீதிகளில் ஜனநடமாட்டம் காணப்பட்டது. ஆனால் பொலிசாரின் பந்தோபஸ்து ஏற்பாடுகள் தொடர்ந்து இருந்து வருகின்றன.

**10,000 ரூபா நன்கொடை**

ஹிந்தி கிளர்ச்சியின்போது ஆர்ப்பாட்டக்காரர்களின் தாக்குதலுக்குள்ளாகி உயிருடன் கொளுத்தப்பட்ட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களின் குடும்பத்துக்கும் பத்தாயிரம்ரூபா வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

**சிறுவர் கைது!**

குறிப்பிடப்பட்ட குற்றங்களுக்காக கைதுசெய்யப்பட்ட மாணவர்களைத் தவிர மற்றையோர் இன்று விடுதலை செய்யப்படுவர் என பொலிஸ் கமிஷனர் தெரிவித்தார். பன்னிரண்டு வயதுக்கு உட்பட்ட 1028 சிறுவர்கள் கடந்த மூன்று தினங்களிலும் கைது செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

**இந்திரா காந்தி**

தேசிய ஒருமைப்பாட்டைக் கருத்தில் கொண்டே ஹிந்தி நாட்டின் உத்தியோக மொழியாக்கப்பட்டதென்றும், அது மக்கள் நலனை பாதிப்பதாக இருந்தால் அதுபற்றி புனராலோசனை செய்யப்படலாம் எனவும் மாணவர்கள் தங்கள் ஆட்சேபத்தை அமைதியான முறையில் தெரிவித்திருந்தால் சிறப்பாகவிருந்திருக்கும் என்றும் சென்னை வந்து புதுடில்லி திரும்பிய தகவல் ஒலிபரப்பு மந்திரி திருமதி இந்திராகாந்தி தெரிவித்தார்.

**தலைவர்கள் பாராட்டு**

ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை ஒத்திவைத்திருப்பது பற்றி முன்னாள் மத்தியஉணவு மந்திரி திரு. சுப்பிரமணியம், தி. மு. க. தலைவர் திரு. சி. என் அண்ணாதுரை ஆகியோர் பாராட்டியுள்ளனர்.

## விநோபாஜி கூறும் மூன்று யோசனைகள்

புதுடில்லி, பெப். 14

நாட்டில் தற்பொழுது ஹிந்தி எதிர்ப்பு கிளர்ச்சிகள் நிறுத்தப்பட்டிருப்பது மிகவும் நல்ல செய்தி என்று ஆச்சார்ய விநோபாஜி தெரிவித்துள்ளார்.

மக்கள் கிளர்ச்சி நடத்துவதன்மூலம் எந்தப் பிரச்னையையும் சுமுகமாகத் தீர்க்க முடியாது என்று கூறிய விநோபாஜி, மூன்று யோசனைகளைத் தெரிவித்துள்ளார்,

1. "கிளர்ச்சி நடைபெறுவது முதலில் முழுவதுமாக நிறுத்தப்படவேண்டும். கிளர்ச்சி நடைபெறுவதை நிறுத்திய பின்னர் பேச்சுவார்த்தைமூலம் பிரச்னையைத் தீர்க்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இந்த விஷயத்தில் அரசாங்கம் மிகவும் புத்திசாலித்தனமாக நடக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

2. ஆங்கிலம்தான்வேண்டும்; ஹிந்தி எமக்கு வேண்டாம் என்று விரும்புபவர்கள்மீது எக்காரணம்கொண்டும் ஹிந்தி மொழி திணிக்கப்படக்கூடாது. அவர்கள் விரும்பும் மொழியை அவர்கள் தொடர்ந்து பெற வாய்ப்பு வசதி அளிக்கப்பட வேண்டும்.

3. ஆங்கிலம் வேண்டாம்; ஹிந்திதான் எமக்குத் தேவை என்று கூறுபவர்கள்மீது ஆங்கிலம் திணிக்கப்படக் கூடாது. ஹிந்தி மொழியிலேயே பூரண வசதிகளும் பெற அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்."

இந்த யோசனைகளை அரசாங்கம் பின்பற்றினால் நாட்டில் எந்தவித மொழிக் கிளர்ச்சியும் தலைகாட்டாது என்றும் விநோபாஜி தெரிவித்துள்ளார்.

## "உண்ணாவிரதத்தை உடன் கைவிடுக"

### விநோபாஜிக்கு ஜனாதிபதி கோரிக்கை

புதுடில்லி, பெப். 14

நாட்டில் ஏற்பட்ட பதற்ற நிலைமை தற்பொழுது குறைந்து மாணவர்களும் தங்களது கிளர்ச்சியை நிறுத்தியிருப்பதால் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டாமென்று ஆச்சார்யா விநோபாஜியை இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் கேட்டுள்ளார்.

தமிழ்நாட்டிலும் மற்றும் நான்கு ராஜ்யங்களிலும் நடைபெற்ற ஹிந்தி எதிர்ப்பு வன்முறைச்செயல்கள் குறித்து நேற்று முன்தினம் விநோபாஜி உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்தார். ஆச்சார்ய விநோபாஜின் உடல் நிலையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லையென்றும் நேற்றிரவு அவர் அமைதியுடன் நித்திரை செய்தாரென்றும் வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

விநோபாஜி எப்பொழுது தமது உண்ணாவிரதத்தைக் கைவிடுவார் என்று சர்வோதய வட்டாரங்களில் கேட்கப்பட்டபொழுது, கிளர்ச்சி ஏற்பட்ட பகுதிகளில் பூரண அமைதி ஏற்பட்ட பின்னரே விநோபாஜி தமது உண்ணாவிரதத்தைக் கைவிடுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

**பிரதமரும் கோரிக்கை**

நாட்டில் இப்பொழுது அமைதி நிலவுவதால் விநோபாஜி தொடர்ந்து உண்ணாவிரதம் இருக்கத் தேவையில்லையென்றும், அரசாங்கத்தின் நிலைமையை அவர் புரிந்திருக்கவேண்டுமென்றும் பிரதமர் சாஸ்திரி நேற்றுத் தெரிவித்துள்ளார்.

**உண்ணா விரதம் நீடிக்கிறது**

இன்று பகல் கிடைத்த செய்திகளின்படி, ஆச்சார்ய விநோபாஜி தொடர்ந்து உண்ணாவிரதமிருக்கிறார் என்றும் அவரின் தேகநிலையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

## ரயில்வேபகுதிக்கு மட்டும் ஒருகோடி ரூபா நஷ்டம்!

### ஹிந்தி எதிர்ப்பு கிளர்ச்சிகளின் எதிரொலி

சென்னை, பெப். 14

ஹிந்தி எதிர்ப்பு கிளர்ச்சிகளினால் இந்திய புகையிரதப் பகுதிக்கு மட்டும் ஒரு கோடி ரூபாவுக்கு அதிகமாகச் சேதம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள், மின்சார ரயில்களையும், சாதாரண ரயில்களையும் எரித்தும் நொறுக்கியும் நாசமாக்கினர் என்றும் எத்தனையோ புகையிரத நிலையங்கள் திரும்பவும் கட்டப்படவேண்டியிருக்கிறதென்றும் பல இடங்களில் புகையிரத ரயில் பாதைகள் அமைக்கப்படவேண்டுமென்றும் ரயில்வே அதிகாரிகள் கூறினர்

'சிக்னல்' கம்பங்கள் பல இடங்களில் இல்லை. ரயில்வே கடவைகளும் சில இடங்களில் நாசமாக்கப்பட்டிருக்கின்றன.

**பல கோடி ரூபா நஷ்டம்**

மாணவர்களினது ஹிந்தி எதிர்ப்பு கிளர்ச்சிகளினால் நாட்டுக்கு பல கோடி ரூபா நஷ்டமேற்பட்டிருக்கிறதென்று மத்திய அரசாங்க அதிகாரி ஒருவர் கூறினர்.

## அமெரிக்காவுக்கு சீன எச்சரிக்கை

பீகிங், பெப். 14

வியட்னாம் விஷயம் குறித்து அமெரிக்காவுக்கு சீனா மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு வியட்னாமில் அமெரிக்கா குண்டுகள் வீசித் தாக்குவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு வடக்கு வியட்னாமில் மேலும் நீடிக்கக்கூடாதென்றும் சீனா அறிவித்துள்ளது.

## மலேசியாவில் அமைதி:

### பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளன

கோலாலம்பூர், பெப். 14

மலேசியாவில் பாதுகாப்பு வேலைகள் பாதிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து இப்பொழுது இங்கு அமைதிநிலவுகிறது

கோலாலம்பூரிலும் மற்றும் சில பகுதிகளிலும் அமுலாக்கப்பட்டிருந்த ஊரடங்கு உத்தரவுகள் ஓரளவு தளர்த்தப்பட்டன.

நேற்றுப் பிற்பகலிலிருந்து எங்கும் அசம்பாவிதம் எதுவும் தலைகாட்டவில்லை என்று அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டு பாதுகாப்பில் வைக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதிசெய்ததாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்படுமாம்.

## துருக்கி பிரதமர் ராஜினமா

### கூட்டரசு வீழ்ந்தது

லண்டன், பெப். 14

துருக்கிப் பிரதமர் திரு. இஸ்மத் இனோனு தமது பதவியை ராஜினமா செய்துள்ளார்.

அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் துருக்கி தேசிய சட்டசபையில் நேற்று முன்தினம் விவாதத்துக்கு எடுக்கப்பட்டு வாக்கெடுப்பு நடைபெற்றது. வாக்கெடுப்பில் அரசாங்கத்துக்குத் தோல்வியேற்பட்டது. இதனைத் தொடர்ந்தே திரு. இஸ்மத் இனோனு தமது பிரதமர் பதவியை ராஜினமா செய்துள்ளார்.

திரு. இனோனு கடந்த 63ம் ஆண்டு கூட்டரசாங்கத்தை நிறுவி அதன் பிரதமரானார்.

துருக்கி கூட்டரசாங்கம் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து தற்பொழுது அங்கு காபந்து அரசாங்கம் அமைக்கப்பட்டிருப்பதாகக் கடைசியாக வெளியான செய்தியொன்று கூறுகிறது.

## ஜப்பான் தூதுகோஷ்டி

புதுடில்லி, பெப். 14

ஜப்பான் தூதுகோஷ்டியொன்று நேற்று புதுடில்லி வந்துசேர்ந்தது. இந்தியாவில் இயந்திரக் கைத்தொழில் ஸ்தாபனமொன்றை நிறுவுவதில் இவர்கள் உதவியளிப்பர்.

## உலகவங்கி தூதுகோஷ்டி

புதுடில்லி, பெப். 14

இந்தியாவுக்கு வந்துள்ள உலக வங்கியின் தூதுகோஷ்டி நேற்று பல இடங்களுக்கும் சுற்று விஜயம் செய்தது.

## மலேசியாவுடன் பேச்சுநடத்த இந்தோனேஷியா தயார்

### ஆனால் முன் நிபந்தனை வேண்டாமென்கிறார் சுபந்திரியோ

டோக்கியோ, பெப். 14

இங்கு வந்துள்ள இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் சுபந்திரியோ நேற்று ஜப்பான் பிரதமர் ஸாட்டோவுடன் தொடர்ந்து பேச்சுகள் நடத்தினார்.

மலேசியத் தகராறு பற்றி டாக்டர் சுபந்திரியோ குறிப்பிடுகையில் மலேசியாவுடன்

(4-ம் பக்கம் பார்க்க)

## தாயகம் திரும்பினர்

புதுடில்லி, பெப். 14

லண்டன் சென்றிருந்த இந்திய வர்த்தக மந்திரி திரு. மனுபாய்ஷா இன்று புதுடில்லி திரும்பினார். தமது லண்டன் விஜயம் நல்ல பயனைக் கொடுத்திருக்கிறதென்று அவர் நிருபர்களிடம் தெரிவித்தார்.



## பௌர்ணமி கலைநிகழ்ச்சிகள்

பௌர்ணமி தினங்கள் தோறும் யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கில் யாழ்ப்பாணம் மாநகரசபையினால் அளிக்கப் பட்டுவந்த கலை நிகழ்ச்சிகள் சிறிது கால இடைவேளைக்குப் பின் இன்று மீண்டும் ஆரம்பமாகிறது.

இன்று மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும் கலை நிகழ்ச்சிகளுக்கு யாழ்ப்பாண மேயர் திரு. எஸ். வி. மகாதேவா தலைமை தாங்குவார். யாழ்ப்பாணம் நாட்டுக்கூத்துக் கலைஞர்களும் அண்ணாவிமாரும் ஒருங்குசேர்ந்து நடிக்கும் "நீலகண்டன் அல்லது தேவசகாயம்பிள்ளை" என்னும் சரித்திர நாடகமும் இன்றைய நிகழ்ச்சிகளில் இடம் பெறுகிறது. இந்நாடகத்தின் தயாரிப்பாளர் ம. யோசேப்பு (பூந்தான்) நாடக ஆடை அலங்காரத்துடன் மேலேயுள்ள படத்தில் தோற்றமளிக்கிறார்.

## நல்ல மழை

சுழிபுரம், ஞாயிறு

நீண்ட காலத்திற்கு பின்னர் கடந்த இரண்டு இரவும் பலத்த மழை இப்பகுதியில் பெய்துள்ளது. இரவு நேரத்தில் சுமார் ஒன்றரை மணித்தியாலம் மழை நன்றாகப்பெய்தது. இதனால் தோட்டம், பெரிய வயல் செய்கைக்காரர்கள் அதிக மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கம்போடியா குற்றச்சாட்டு

நம்பென், பெப். 14

தென் வியட்னாமின் ஆக்கிரமிப்பு வேலைகள் நிறுத்தப்பட வேண்டுமென்று கம்போடியா எச்சரிக்கை செய்துள்ளது. கம்போடியா எல்லைகளை தென் வியட்னாம் வேண்டுமென்று தாக்குவதாக கம்போடியா குற்றம் சுமத்தியுள்ளது.

## மலேசியா . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சு நடத்த இந்தோனேஷியா இப்பொழுதும் தயாராக இருக்கிறதென்றும் ஆனால் இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு முன்நிபந்தனை எதுவும் விதிக்கப்படக்கூடாதென்றும் தெரிவித்தார்.

மலேசியத் தகராறைத் தீர்த்துவைப்பதில் ஜப்பான் பிரதமர் மிகுந்த அக்கறை செலுத்திவருகிறார். இந்தத் தகராறைத் தீர்ப்பதற்கு அவர் மத்தியஸ்தம் வகிக்க விரும்பியிருப்பது குறிப்பிடத்தக்கது.






## 'உரிமைகளைப் பெறவழி'

சுழிபுரம், திங்கள்

"இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களின் குறைகளைப்போக்குவதற்கும் குறிப்பாக இலங்கை மக்களின் முக்கியமான பிரச்னைகளை சிங்கள நண்பர்களுடன் நல்லெண்ணத்துடன் பேசிப் பெற்றுக்கொள்வதற்கும் ஏகப் பிரதிநிதியாக நாம் ஒருவரைத் தெரிவுசெய்ய வேண்டும். நாம் அப்படிச்செய்யாமல் விடுவோமானால் பல தொல்லைகளுக்குஉள்ளாவோம்" என வட்டுக்கோட்டைத்தொகுதியில் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிடும் திரு. அ. தம்பிப்பிள்ளையை ஆதரித்து காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலைக்கு அருகாமையிலுள்ள சக்கலாவோடை மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் திரு வி. ஆறுமுகம் பேசுகையில் குறிப்பிட்டார். கூட்டத்துக்கு திரு. எச். பொன்னம்பலம் தலைமை வகித்தார்.

திருமதி சோ. நாகம்மா பேசுகையில், எமது கிராமங்களின் முன்னேற்றத்தில் பாடுபடும் சேவையாளர்கள் தான் பாராளுமன்றம்போய் சிறந்த சேவை செய்யக்கூடியவர்கள் என்றும் வயது வந்த பெரியார்களின் சேவை கிடைப்பது எமக்கு ஒரு வழிகாட்டியாகும் என்றும் கூறினார்.

ஹிராஜி வி. எம். எம். அபுசாலி பேசுகையில் தமிழ் இனத்துக்கு சேவை செய்யக் கூடியவர்கள் கட்சிசார்பற்றவர்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் என்றார்.

சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிடும் திரு. தம்பிப்பிள்ளை பேசுகையில் தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களைத் திறமைசாலிகளாலோ அல்லது போராட்டங்கள், தியாகம் செய்தவன் மூலமாகப் போக்கிவிட முடியாது என்றும், பெறவேண்டியவற்றை பேச்சுவார்த்தைகள் மூலம்தான் பெற்றுக் கொள்ள லாமெனவும்கூறினார். உணவுப் பிரச்னை, வீட்டுப் பிரச்னை, உடைப்பிரச்னை ஆகியவற்றை எப்படித் தீர்ப்பது என்பதில் கவனம் செலுத்த வேண்டிய நேரத்தில் தேவையற்ற விஷயத்தில் கவனத்தைச் செலுத்துகின்றனர் என்றும் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நாம் பெரும்பான்மையாக வாழும் மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் திரு. தம்பிப்பிள்ளை கூறினார்.

## ஆஸ்பத்திரியில் காணும் 'காட்சிகள்'

யாழ்ப்பாணம், திங்கள்

புங்குடுதீவு அரசினர் ஆஸ்பத்திரியில் நோயாளிகளுடன் நாய்களும் மாடுகளும் ஆடுகளும் வார்ட்டுகளில் தஞ்சம் புகுந்துள்ளன என்றும் தினசரி இவற்றை அப்புறப்படுத்துவதில் ஆஸ்பத்திரி ஊழியருக்குப் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஆஸ்பத்திரியைச் சுற்றி சுவரோ அல்லது பாதுகாப்போ இல்லாததாலேயே இப்படியான சம்பவங்கள் நிகழ்கின்றன என்று கூறப்படுகிறது. இந்த ஆஸ்பத்திரியை அடுத்தாற்போல் ஒரு மீன் விற்குமிடம் உண்டென்றும் மீன் வாங்குபவர்கள்கூட, ஆஸ்பத்திரியிலுள்ள வார்ட்டுக்களின் ஊடாகச் சென்று தினசரி மீன் வாங்கி வருகின்றனர் என்றும் பொது மக்கள் இதுபற்றி அதிகாரிகளுக்கு புகார் செய்துள்ளார்கள் எனவும் தெரியவருகின்றது.


ராஜா சினிமா (சுழிபுரம்)

சிவாஜி - தேவிகா

நடிக்கும்

அன்னை இல்லம்


# போக்குவரத்து கஷ்டத்தை சங்கம் தீர்த்துவைக்கவேண்டும்

## அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேச்சு

கிளிநொச்சி, ஞாயிறு

"பிரயாணிகள் சங்கம் மூலம் மக்களின் பிரயாணக் கஷ்டங்களுக்கு ஒரு தீர்வுகாணமுடியும், நாங்கள் ஒற்றுமையாக இருந்து பணியாற்றினால் எங்கள் பிரயாணக் கஷ்டங்களை இலங்கை போக்குவரத்துச் சபை ஆராய்ந்து அவற்றைத் தீர்த்துவைக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்" என்று கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கரைச்சிப்பகுதி பஸ் பிரயாணிகள் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய வித்தியாலய அதிபர் சி. சிவகுருநாதன் கூறினார்.

திரு. எக்ஸ். ஆர். பிரான்சிஸ் பேசுகையில், கிளிநொச்சியிலிருந்து மூன்று பஸ்கள் அக்கராயன் குளம், கல்மடு, பரந்தன் வழியாக பூநகரி ஆகிய இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்றும், பஸ் பிரயாணிகள் இன்று அனுபவித்து வரும் கஷ்டங்களைத் தீர்ப்பதற்கு இச் சங்கம் பெருமளவு உதவவேண்டுமென்றும், சங்கத்தோடு எல்லோரும் ஒத்துழைக்கவேண்டுமென்றும் கூறினார்.

திருவாளர்கள் சோதிநாதன், வீரசிங்கம், அப்புத்துரை, மார்க்கண்டு ஆகியோரும் பேசினார்கள். இறுதியில் பின்வருவோர் நடப்புவருடச்செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சி. சிவகுருநாதன், உப தலைவர்கள்: டாக்டர் லூக் குசைப்பிள்ளை, திரு. எஸ். பொன்னம்பலம், காரியதரிசி: திரு. எக்ஸ். ஆர். பிரான்சிஸ், உப காரியதரிசி: திரு. என். சோதிநாதன், தனாதிகாரி: திரு. எஸ். கனகசபாபதி, செயற்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள் பி. அப்புத்துரை, கே. சிங்காரவேலு, சி. வீரசிங்கம், எஸ். தியாகராசா, பி. கே. மூர்த்தி, ஏ. மார்க்கண்டு, கே. கந்தையா, எஸ். சிவநாதன், ஏ. சுப்பிரமணியம், கணக்குப் பரிசோதகர்: திரு. நே. சின்னத்தம்பி.

## ஸ்கந்தவரோதயா வெற்றி பெற்றது

சுழிபுரம், ஞாயிறு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி கோஷ்டிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி கோஷ்டிக்குமிடையே சிநேகிதபூர்வமாக யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி கோஷ்டியினர் வெற்பெற்றனர்.

முதலாவது ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியினர் 87 ஓட்டங்களையும் யாழ்ப்பாணக் கல்லூரியினர் 83 ஓட்டங்களையும் எடுத்தனர். இரண்டாவது ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியினர் 66 ஓட்டங்களையும், ஸ்கந்தவரோதயாக் கல்லூரியினர் 8 விக்கெட் நஷ்டத்திற்கு 67ஓட்டங்களையும் எடுத்து வெற்றிபெற்றனர்.


மனோகரா (யாழ்ப்பாணம்) (போன்) 485

Daily 4-45, 7-00 & 9-45

MANHUNT IN THE JUNGLE

(Serial)

REGAL — JAFFNA

NOW SHOWING

Chuck Connors–KamalaDevi

in

GERONIMO

(Panavision – Technicolor)

6-வது வெற்றி வாரம்!

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 3 காட்சிகள்: மாலை 2-30, இரவு 6-30, 9-30

சனி, ஞாயிறு 4 காட்சிகள்:

காலை 10-30, மாலை 2-30, இரவு 6-30, 9-30



சிவாஜி கணேசன் - சாவித்திரி

மற்றும் பலர் நடித்த

கர்ணன்

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

மற்றும் 6 சினிமாஸ் திரைகளில்

ஜெமினி கணேசன் - சாவித்திரி

நடித்த

கற்பகம்

# அயூப்கான் ஏப்ரலில் ரஷ்யா செல்வார்

ராவல்பிண்டி, பெப். 14

பாகிஸ்தான் ஜனாதிபதி பீல்ட்மார்ஷல் அயூப்கான் ஏப்ரல் மாதம் சோவியத் யூனியனுக்கு விஜயஞ்செய்வார். ரஷ்யாவின் அழைப்பின் மீதே இவர் அங்கு செல்வார்.

அதிபர் அயூப்கான் ஏப்ரல் மாதம் 3ந் தேதி ரஷ்யா செல்வாரென்றும் அங்கு அவர் 9ந் தேதிவரை தங்கியிருப்பாரென்றும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அடுத்த மாதம் இவா கம்யூனிஸ்ட் சீனாவுக்கும் செல்கிறார். அங்கு இவர் ஒருவாரகாலம் தங்கியிருப்பார். சீனாவுக்கு விஜயஞ்செய்யுமாறு பிரதமர் சூஎன்-லாய் அதிபர் அயூப்கானை அழைத்திருந்தார்.

**லாகூரில்**

லாகூரில் இன்று அதிபர் அயூப்கானும், பர்மா புரட்சி சபைத் தலைவர் ஜெனரல் நீவினும் இன்று சந்தித்துப் பேச்சுகள் நடத்தினர்.

—

## வாலிப முன்னணி நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை ஞாயிறு தீவுப்பகுதி தமிழ்க் காங்கிரஸ வாலிப முன்னணியின் அமைப்புக்கூட்டம் புங்குடுதீவில் இரா. பரமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தீவின் பல கிராமங்களில் இருந்தும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் உரைநிகழ்த்திய திரு. க. மு. சி. சுந்தரராஜா ஜனநாயகத்தின் ஆணிவேர் பாராளுமன்றமாகையால், ஜனநாயகத்தை பாதுகாக்கக்கூடிய பிரதிநிதிகளை நாம் பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

முன்னணியின் உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

பாதுகாவலர்கள்: சேர். வை. துரைசுவாமி, திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், தலைவர்: திரு. என். ரி. சிவஞானம், உபதலைவர் திரு. நா. கணபதிப்பிள்ளை, பொதுச்செயலாளர்: திரு. க. மு. சி. சுந்தரராசா, பொருளாளர்: திரு. அ. நவேந்திரன்.

—

## நெருக்கடி நிலவும் பகுதிக்கு உதவியில்லை
### மேற்கு ஜெர்மன் முடிவு

பொன், பெப். 14

இஸ்ரேல் உட்பட நெருக்கடி நிலவும் நாடுகளுக்கு உதவிகள் எதுவும் வழங்குவதில்லை என்று மேற்கு ஜெர்மன் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த விபரத்தை மேற்கு ஜெர்மன் பிரதமர் நேற்று நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் வெளியிட்டார்.

—

## வானொலி நிகழ்ச்சிகள்
### கொழும்பு
### திங்கள் 15-2-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-00 துதிப் பாடல்கள், 7-30 மெல்லிசை, 8 5 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 திரை கானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்—எஸ். சிறிதாஸ், 7-15 பாட்டு—பரம்ஜோதிஅம்மா ராசமாணிக்கம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள், 9-15 வாத்திய இசை, 9-30 தமிழ் மூலம் சிங்களம், 9-45 நேயர் விருப்பம். 10-15 எங்கள் விருப்பம்.


### விற்பனைக்கு

அரியாலையில் குளத்துக்குக் கிட்ட 40 பரப்பு தெற்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: நேரில் திருமதி இராஜமணி மயில்வாகனம், அராலி, வடக்கு. 1531


ஆசிரியருக்குக் கடிதங்கள்

## தகவற்பகுதி கவனிக்குமா?

இலங்கைக் கைத்தொழிற் பொருட்காட்சி சுமார் 120 லட்சம் ரூபா செலவிற் தயாரிக்கப்பட்டுக் கொழும்பில் நிகழ்கிறது. பல நாடுகளும் பற்று பற்றும் இப்பொருட்காட்சியில் இன்றைய உலகின் ஜீவநாடியான விஞ்ஞானத்தின் விந்தைகளும் விளங்குகின்றன. அமெரிக்கா தனது விஞ்ஞான உயர்வையும், கண்டுபிடிப்புகளையும் அங்கே பறைசாற்றிக்கொண்டு இருக்கிறது. டெலிவிஷன் (தொலைக்காட்சி) இயங்குவதும் இன்னோரன்ன பிறவிளக்கங்களும் விளக்கப்படுகின்றன. நாள்தோறும் ஆயிரக்கணக்கானோர் சென்று கண்டு களிக்கின்றனர். ஆனால் இலங்கைவாழ் ஒவ்வொரு மாணவனும் காணவேண்டிய இக்காட்சி எல்லோரும் காண வசதி கிட்டுமா? விஞ்ஞான மாணவர்கள் காணவேண்டிய இக்காட்சியை அவர்கள் தவறவிடவேண்டியதானா? எனவே இக்காட்சிகளை எல்லோரும் காண வாய்ப்புக் கொடுக்கவேண்டும். இக்காட்சிகளை இலங்கைத் தகவற்பகுதியின் உதவியுடன் சினிமாப் படமாக எடுத்து ஊர்கள் தோறும் காண்பிக்கவேண்டும். எல்லாக் காட்சிகளையும் படமாக்க முடியாவிடின் முக்கியமான காட்சிகளையாவது படமாக்கி பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் காண்பிக்கவேண்டும். பாடசாலைகளில் காண்பிப்பதன் மூலம் ஒவ்வொரு மாணவனும் காண வாய்ப்பளிக்கவேண்டும். மின் விளக்குகளிற்காக மட்டும் 30 இலட்சத்தைச் செலவிட்ட கைத்தொழில் இலாகா இந்நன்மையான செயலைச் செய்யப் பின் தங்கக்கூடாது. இதன் மூலம் மாணவர்களுக்கு மட்டுமின்றி கைத்தொழில் செய்பவர்களுக்கும் ஊக்கம் அதிகரிக்கும்.

த. இந்திரலிங்கம்.

யாழ்ப்பாணம்.

●

## நீர் வீணாகாமல்...

வருடா வருடம் தீவுப்பகுதியில் தண்ணீர்ப் பஞ்சம் தலைவிரித்தாடுவது சகஜம் தற்போதைய நிலையை நோக்கினால் தண்ணீர் பஞ்சம் கடுகதியில் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறது போலும். சில இடங்களில் வரட்சி நிலவுகிறது. இது என்றுமில்லாத கஷ்டநிலை. இந்நிலையில் நாங்கள் தண்ணீரை மிக அளவாகத் தேவைக்கேற்ப உபயோகிப்பதைவிடச் சிறந்த வழி வேறெதுவும் இல்லை.

தற்போது நெடுந்தீவில் குழாய் மூலம் தண்ணீர் சில இடங்களுக்கு விநியோகிக்கப் பட்டுவருகிறது. தினசரி பல மணி நேரம் இதை விநியோகிப்பதால் மக்களின் தேவைகளுக்கு அதிகமாகத் தண்ணீர் விரயமாகிறது. இதனால் சுமார் ஒரு மாதத்திற்குப் போதக்கூடிய நீர் ஒரு வாரத்தினுள் ஒரு பகுதியாரால் வீணடிக்கப்படுகிறது. இவ்வேகத்தில் தண்ணீர் விரயமானால் காலகதியில் கடல்நீரை கிணற்றின் எலது குழாயின் மூலமாக மனம் வருந்தி அருந்த நேரிடும்.

—இரா. தர்மலிங்கம்


வரி விளம்பரம்

### தேவை

விற்பனையாளருடன் ரூபா 3000-00 பிணையும் செலுத்தக்கூடிய முன் அனுபவமும், நிர்வாகத் திறமையும், கல்வித் தகைமையும் கொண்ட கன்ரீன் மனேஜர் தேவை. தகைமைக்கேற்ற சம்பளம். காரியதரிசி, நொதேன் ஸ்போட்ஸ்கிளப், இராசாகட்டிடம், பெரியகடை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். நிர்வாக அதிகாரி. 1564

### தேவை

முன் அநுபவமும், நிர்வாகத் திறமையுள்ள பெண் லிகிதர்கள் தேவை. நாஷனல் அச்சகம், 1-ம் மாடி, இராசா கட்டிடம், பெரியகடை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். நிர்வாக அதிகாரி. 1563

### தேவை

பனைவடலி மட்டைத்தும்பு, சுத்தம் செய்யப்பட்டது. வெள்ளை, கறுப்பு. அந்தர் விலைகுறித்து விண்ணப்பிக்கவும். A 2 / F 4, புளுமண்டல் மாடி, கொழும்பு. 1583

## S. R. S.
### ஜவுளி மாளிகையில்

6 யார், 7 யார் கைத்தறிச் சேலைகள்,100-ம் நம்பர் 120-ம் நம்பர் நூல்களால் எங்கள் சொந்த தறிகளில் தயார் செய்யப்பட்ட நித்தபாவனைக்குகந்த சேலைகள் விற்பனைக்குத் தயாராகவிருக்கிறது.

எஸ். ஆர். செல்லத்துரை
216,காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 296.

# அருத எண்ணெய்

(அறுபதாம் பச்சையும் வேறு 44 அரிய மூலிகைகளும் சேர்ந்தது)

கூந்தலை அடர்த்தியாகவும் நீளமாகவும் வளர்க்கும். தலைமயிர் உதிர்வதையும், நரைப்பதையும் தடுக்கும். பீனிசத்தை முற்றாக குணப்படுத்தும். மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்களுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். கண் எரிச்சல், காது இரைச்சல், காதில் சீழ் வடிதல், அடிக்கடி ஜலதோஷம் பிடித்தல், தும்மல், தலையிடி ஆகிய நோய்களைக் குணப்படுத்தும்.

## சிறுவர் முதல் பெரியோர் வரை பாவிக்கலாம்

தயாரிப்பாளர்: பி. எம். திஸாநாயக்கா, (நான்கு கோவில்களின் தர்மகர்த்தா)

அருத எண்ணெய் அலுவலகம், கண்டி ரோட், கம்பளை

முழுப்போத்தல் ரூ. 10-00 கால் போத்தல் ரூ. 3-00
அரைப்போத்தல் ரூ. 5-00 2 அவு. போத்தல் ரூ. 1-00

யாழ்ப்பாணத்தில் அருத எண்ணெய் விற்பனையாளர்கள்:

**யாழ்ப்பாணம்**
வி. எஸ், கைலாசபிள்ளை அன் சன்ஸ், 76, பெரியகடை
ஏ. இராசையா அன் சன்ஸ், 69, கே. கே. எஸ். ரோட்.
ஸ்ரீ ஆனந்த பவான், ஸ்டேஷன் ரோட்.
எஸ். வி. பி. கார்த்திகேயபிள்ளை, பெரியகடை.
த. சிவகுரு, நாச்சிமார் கோவிலடி.

**நல்லூர்**
பி. இராசரத்தினம், குமரன் மெடிக்கல் ஸ்ரோஸ்.
முருகன் மெடிக்கல் ஸ்ரோஸ்.
நடன முருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ்.
ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்.

**திருநெல்வேலி**
சிவன் ஸ்ரோர்ஸ் பரமேஸ்வரா ஜங்ஷன்.
எம். நடராசா & பிறதர்ஸ், திருநெல்வேலி வடக்கு,

**கோப்பாய்**
ந. கதிரேசு, கோப்பாய் சந்தி.
சிவபாதம் ஸ்டோர்ஸ், இருபாலை சந்தி.

**சாவகச்சேரி**
லிங்கம் ஸ்ரோர்,
அம்பிகா டிஸ்பென்ஸரி,
ஏ. எம். அபூபக்கர்,
எம். எம். சுல்தான் அப்துல்காதர் அன் பிரதர்,
விநாயகர் ஸ்ரோர்ஸ்,

**இணுவில்**
குமரகுருபர ஸ்ரோர்ஸ், எஸ். பரமலிங்கம்.

**சுன்னாகம்**
யாழ்ட்டன் ஸ்ரோர்ஸ்,
ராஜா மெடிக்கல் ஸ்ரோர்ஸ்,
பிருந்தா மெடிக்கல்ஸ்ரோர்ஸ்
ஆர். எம். கான்பாய்.
எஸ். வைத்திலிங்கம், சுன்னாகம் தெற்கு.
எம். கே. செல்லையா, 71, மார்க்கெட்.
ஏ. கே. சாந்தலிங்கம் 70, மார்க்கெட்
எம். தம்பித்துரை, கந்தரோடை ரோட்.

**சுலட்டி**
கே. டி. சிவகுரு, 17, நாச்சிமார் கோவிலடி

**கோண்டாவில்**
கே. கோபாலபிள்ளை, கோண்டாவில் மேற்கு

**சுளிபுரம்**
என். முருகேசு, மூளாய் ஆஸ்பத்திரிமுன்னால்,மூளாய்.
கே. தம்பு,

**சண்டிலிப்பாய்**
கே. டி. நடராஜா, மாஹியப்பிட்டி.

**காங்கேசன்துறை**
கே. செல்லையா அன் பிறதர்.
சாந்தினி ஸ்ரோர்ஸ்,
எஸ். இளையதம்பி, பருத்தித்துறை ரோட்.
டி. கனகசபை, மெயின் வீதி.
சிங்கம் பீடா ஸ்ரோர்ஸ்,
விநாயகர் ஸ்ரோர்ஸ்.
பிள்ளையார் ஸ்ரோர்ஸ்.
ஆசை ஸ்ரோர்ஸ், தையிட்டி.
வி. ஐயாத்துரை.
ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்.

**பண்டத்தரிப்பு**
ப. நோ. கூ. ச. சமாச புடவை சில்லறை விற்பனவு நிலையம், பிரதான வீதி.
ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ்
என். நல்லசேகரம் ஸ்ரோர்ஸ்
கே. எல். அந்தோனிப்பிள்ளை அன் சன்ஸ்.

**ஊர்காவற்றுறை**
வசந்தா ஸ்ரோர்ஸ அன் பேக்கரி.
மகாலக்ஷ்மி ஸ்ரோர்ஸ.
வி. எஸ். விஜசித்தம்பி அன் சன்ஸ.
முருகன் ஸ்ரோர்ஸ்.
வி. திருநாவுக்கரசு, ப. நோ. கூ. ச., பருத்தியடைப்பு.
பாலா பிறதர்ஸ்

**மானிப்பாய்**
எம். சின்னத்துரை.
வி. எஸ். கணபதிப்பிள்ளை அன் பிறதர்.

**ஆனைக்கோட்டை**
ஆர். அருணாசலம், வண்ணார்பண்ணை வ. மே.

**ஆவரங்கால்**
மல்லிகா ஸ்ரோர்ஸ்.
எம். சீவரத்தினம்.

**புத்தூர்**
செல்லத்துரை ஸ்ரோர்ஸ்.

**துன்னாலை தெற்கு**
ஐ. பொன்னம்பலம்.

**மாவிட்டபுரம்**
ராஜா ஸ்ரோர்ஸ்.
முருகன் ஸ்ரோர்ஸ்.

**உடுவில்**
எஸ். மயில்வாகனம்,

**மயிலிட்டி**
எஸ். நடராசா, மயிலிட்டி கரை.
கே. சிதம்பரப்பிள்ளை
அ. மிக்கேல்பிள்ளை அன் சன்ஸ்.
ஜி. சிமியோன்பிள்ளை.
எஸ். கனகசபை, பலாலி சந்தி.

**கரவெட்டி**
நடனமுருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ், நெல்லியடி.
வி. சுப்பிரமணியம், நவிண்டில்.
லக்ஷ்மி ஸ்ரோர்ஸ், நெல்லியடி.
ஈஸ்வரி மெடிக்கல் ஸ்ரோர்ஸ், நெல்லியடி
எஸ்.வி. முருகேசு, நெல்லியடி.
கே. எஸ். வீரசக்தி, மாணிக்கபதி, கரவெட்டி மேற்கு.
கிருஷ்ணா ஸ்ரோர்ஸ,
முருகன் ஸ்ரோர்ஸ்.
கணேஷ் மெடிக்கல் ஸ்ரோரஸ், நெல்லியடி.

**பருத்தித்துறை**
கே. எஸ்,மார்க்கண்டு.
குமாரவேல் மருந்துச்சாலை.

**வல்வெட்டித்துறை**
கலாநிதி ஸ்டோர்ஸ்
எஸ. கே. சின்னத்துரை.
ந. எம். விசுவலிங்கம்.

**மில்லடி**
கே. சுப்பிரமணியம், கல்வத்தை.

**உடுப்பிட்டி**
வி. சீவரத்தினம், வைரவர் கோவிலடி.

**அச்சுவேலி**
டி. இராமலிங்கம்,அன் சன்ஸ.
ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ.
எம். இராசையா.
எஸ். கந்தசாமி, சன்னதி ரோட்.
கணேசன் ஸ்ரோர்.
சுகன்யா ஸ்டோர்.

**தெல்லிப்பழை**
எஸ். ரங்கநாதன் அன் கம்பெனி.

**சங்கானை**
கதிர்வேல் மெடிக்கல் ஸ்ரோர்ஸ்,
என். டி. இராசரத்தினம், மார்க்கெட் பிரைட்ஸ்
ஏ. டி. வேலுப்பிள்ளை அன் சன்ஸ.
என். காசிப்பிள்ளை.

**உரும்பராய்**
விக்னேஸ்வரன் ஸ்ரோர்ஸ்
எஸ். தனபாலசிங்கம்,

யாழ்ப்பாணத்திற்கு ஏகவிநியோகஸ்தர்கள்:

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

53, காங்கேசன்துறை வீதி, (போன்: 541) யாழ்ப்பாணம்.

# "புரட்சி சக்திகளுடன் . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்துள்ளனர். இதன் விளைவே கடந்த 80 ஆண்டு காலத்திற்கு முன்பு தமிழர்கள் இருந்த நிலையைவிட அவலமான படுகுழியில் வாழ நேரிட்டிருப்பதாகும். தவறான இந்தத் தலைமையை தமிழ்பேசும் மக்கள் தொடர்ந்து ஏற்பாராயின் அவர்கள் முற்றுகச் சிரழிந்துபோல் விடுவர். எதிர்காலச் சந்ததியினரின் நலனை முன்னிட்டாவது தமிழர்கள் தமது தலைமையை மாற்றிக்கொள்ள வேண்டும்.

சிங்கள மக்கள் மத்தியில் நிலவும் வகுப்புவாதக் கட்சிகளுக்கு எந்தவிதத்திலும் உடந்தையாக இருக்கக்கூடியவர்களை தமிழர்கள் ஒருபோதும் தெரிவுசெய்யக் கூடாது. சிங்கள அரசியல் கட்சிகளுக்கிடையே சமநிலை ஏற்படுத்துவதன்மூலம் உரிமைகளைப் பெற முடியும் என எண்ணுவது மிகவும் தவறானது. பகற்கனவு போன்றது. சிங்கள வகுப்புவாதக் கட்சிகளிடம் உரிமை தாருங்கள் என்று வாதாடி உரிமை பெற முடியாது.

## போராடியே உரிமை பெறலாம்

போராட்டம் இன்றி எதுவும் தானாக வந்தடைவதில்லை. போராடியே உரிமை பெற வேண்டும் தமிழ்பேசும் மக்கள் மட்டும் போராடி தமது உரிமைகளை ஒருபோதும் பெற முடியாது. தமிழர்கள் கடந்த டல ஆண்டுகளாக நடத்தி வந்துள்ள போராட்டங்கள் இந்த உண்மையை உணர்த்தப் போதுமானது. தமிழர்கள் தமது பிரதேசங்களில் நடத்திய போராட்டங்களை அடக்கி ஒடுக்க அநாகரிகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்விளைவு தமிழ்மக்கள் சொல்லொண்ணுக் கஷ்டங்களை அனுபவித்தனர். தமிழர்களை அரசியல் அனாதைகளாக மற்றவர்கள் கருதக்கூடியவகையில் தமிழர்களின் தலைமைப்பீடம் நடந்து வந்துள்ளது.

## வளமான எதிர்காலம்

தமிழ்பேசும் மக்களுக்கு வளமான எதிர்காலம் காத்திருக்கிறது. வளமான எதிர்காலத்திற்கு வருக என்று தென்னிலங்கையிலுள்ள தொழிலாளர்கள், நடுத்தர வகுப்பினர், அறிவுபடைத்த புரட்சி எண்ணங் கொண்டவர்கள் அழைக்கிறார்கள். தமிழ்மக்களை எதிர் நோக்கி அழைக்கும் குரலை தமிழர்கள் ஏற்கப் போகிறார்களா இல்லையா என்பதனை பொதுத்தேர்தல் நிர்ணயிக்கப் போகிறது.

சிங்களத் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், வடக்கு. கிழக்கு மாகாண தமிழ்மக்கள் ஒன்றுபட்டு ஓரணியில் திரண்டு ஒரே பாதையில் செல்வாராயின் உண்மையான சோஷலிஸ ஆட்சி இலங்கையில் உதயமாகும். இலங்கை மக்கள் சுபிட்சமாக, வளமாக வாழ முடியும்.

புரட்சிவாத சமசமாஜக்கட்சி சிங்கள-தமிழர்கள் கூட்டணிக்காகப் பாடுபட்டு வருகிறது. புரட்சிவாத சமசமாஜக்கட்சி அபேட்சகர்கள் நான்கு பேர் மட்டும் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர். இவர்களால் என்ன சாதிக்க முடியும்என்று கேட்கிறார்கள்.

பார்லிமெண்டில் நமக்கு நம்பிக்கையில்லை. வகுப்புவாத சக்திகளுக்கு அது உடந்தையாக இருக்கின்றது. பார்லிமெண்டை நமதுகட்சி தேசிய பிரசார மேடையாகவே கருதுகிறது. சிங்களத் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், தமிழ்மக்கள் ஆகிய மூன்று சக்திகளும் ஒன்றுபட்டுவிட்டன என்றும் மற்றையோர் ஆதரவு அளிக்க வேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்தி அவர்களை எமக்கு ஆதரவு கொடுக்க வற்புறுத்துவோம்.

தமிழ்ப்பகுதிகளில் குறிப்பாக காங்கேசன்துறை வாக்காளர்கள் புரட்சிவாத சமசமாஜக்கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் திரு. வி. காராளசிங்கத்தை தெரிவு செய்யின் புதிய சகாப்தத்தை நோக்கி காலடி வைத்துவிட்டார்கள் என்ற நிலை ஏற்படுத்துவார்கள். தென்னிலங்கை மக்கள் வடஇலங்கை மக்களின் எழுச்சியைக் கண்டு திகைப்படைவர். இதன்விளைவாக தமிழர்களுடன் பேச்சுகள் நடத்த சிங்களத் தலைவர்கள் முன்வருவார்கள்.

## புரட்சிசக்திகளுடன் சேர்ந்தால்...

தமிழ்மக்கள் புரட்சிச் சக்திகளுடன் இணைய ஆரம்பித்துவிட்டார்கள். இது நமக்கு ஆபத்து என எண்ணி அவர்கள் பேச்சுகள் நடத்வரக்கூடிய நிலையை தமிழ்ப்பிரதிநிதிகளால் செய்ய முடியாது. ஆனால் புரட்சிவாத சமசமாஜக்கட்சியின் தமிழ்ப்பிரதிநிதியால் செய்ய முடியும். ஓரணியில் தமிழ்ப் பிரதிநிதிகள் சென்றாலும்கூட சிங்கள அரசாங்கங்கள் ஒருபோதும் உரிமை வழங்கப்போவதில்லை. இதனை தமிழ்பேசும் மக்கள் உணர வேண்டும் புரட்சி சக்திகளுடன் கூட்டணி சேர தமிழர்கள் முன்வரும்போது இந்நாடு உண்மையான விடுதலைச் சுதந்திரத்தை நோக்கி விறு நடைபோடும் இதற்கு எந்த விதமான ஐயமுமில்லை.

புரட்சிவாத சமசமாஜக்கட்சி அபேட்சகராக காங்கேசன்துறையில் போட்டியிடும் திரு. வி. காராளசிங்கம் பேசியதாவது:-

## எதிர்காலத்தை நிர்ணயிக்கும்

தமிழ் பேசும் மக்கள் தனிப்பட்டவர்களின் திறமைக்காகவோ அவர்களின் உதவி கருதியோ வாக்களிக்கக் கூடாது. இந்நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப்போகும் தேர்தல் இது. தமிழர்கள் தம்மை சூனியமான பாதைக்கு வழிநடத்திச் செல்லும் தலைமைப்பீடத்தை நிராகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. கஷ்டங்களை உண்டாக்கக்காரணமாக இருந்தவர்களை நாம் கப்புவதனால் பயனில்லை. போராடியே உரிமை பெறவேண்டும் என்ற விஷயத்தில் மட்டும் ஒன்றுபட்டுக் காணப்படும் நாம் ஏன் சமஷ்டிக்கட்சியினருடன் சேரக்கூடாது என்று கேட்கிறார்கள் சமஷ்டிக்கட்சிக்கும் நமக்கும் அடிப்படைக் கொள்கையிலேயே வேற்றுமை சமஷ்டிக்கட்சி தமிழர்கள் ஓரணியில் திரள்வதனையே அடிப்படை அரசியலாகக் கொண்டுள்ளது. இந்நிலையில், நாம் அவர்களுடன் கூட்டுச் சேர்வதெப்படி. சரியானபாதையில் செல்லும் நமது கட்சி தவறான சூனியமான பாதையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. எந்தப் பிரச்னையும்மலைநாட்டிலே ஆரம்பிக்கப்படுகிறது. இன்று மலைநாட்டுத் தமிழர்களை அவர்கள் சம்மதமின்றி வெளியேற்றமுனையும் அரசாங்கம் நாளை நம்மையும் வெளியேற்றுதுஎன்பதற்கு என்ன உறுதி. தமிழ்மக்கள் புரட்சிவாத சமசமாஜக்கட்சி அபேட்சகருக்கு ஆதரவளிப்பதன் மூலம் புரட்சி எண்ணங் கொண்ட சிங்களத் தலைவர்களுக்கு ஊக்கமும் உறுதியும் அளிக்கமுடியும்.

திரு. ஆர். பாலுதேவன், திரு. எஸ். நடராசா ஆகியோரும் பேசினர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

# வவனியாப் பகுதிக்கு 5 லட்சம் ரூபா நிதி உதவி

# மேலும் இரண்டரை லட்சம் ரூபா நிதி உதவுமாறு கோரிக்கை

வவனியா ஞாயிறு

சூருவளியால் பாதிக்கப்பட்ட வவனியாத் தொகுதி மக்களுக்கு சமூக சேவை பகுதி இதுவரை ஐந்து லட்சம் ரூபா நிதி உதவி வழங்கியுள்ளது. இந்த நிதி உதவி, இப்பகுதி மக்களுக்கு உணவுப் பொருள்களாகவும், பணமாகவும்சேமநிவாரணஉதவியாகவும்வழங்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர மேலும் இரண்டரை லட்சம் ரூபா சமூகசேவா பகுதி செலவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது சம்பந்தமான கோரிக்கையொன்றை, வவனியா அரசாங்க அதிபர் திரு. ஆர். வி. சேனநாயக்காவும், சமூகசேவைப்பகுதி அதிகாரி திரு. விஜயரட்ணமும் விடுத்துள்ளனர்.

சூருவளியால் பாதிக்கப்பட்டு தொழிலின்றிக் கஷ்டப்படும் சேமமடு குடியேற்றத்திட்டப்பகுதி மக்களுக்கு அந்தப்பகுதியிலேயே முதற்தடவையாக வேலை வழங்கப்பட்டுள்ளது.

## உணவின்றி மக்கள் கஷ்டம்

வவனியாமாவட்டத்திலுள்ள மக்கள் சூருவளியினாலும் வரட்சியினாலும் பாதிக்கப்பட்டு அன்றாட சீவியத்திற்குக் கூட வழியின்றி பட்டினிப் பிணியால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் குடியேற்றப்பகுதி மக்களே கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நேற்று முன் தினம் தொடக்கம் முதற்தடவையாக கஷ்ட நிவாரண வேலை சேமமடு குடியேற்றத்திட்டத்தில் வழங்கப்பட்டது. இந்த நிவாரணவேலைக்கும் பணம் அளிப்பது சமூக சேவைப்பகுதியல்ல என்றும் ஆனால் சமூக சேவைப்பகுதியிலிருந்து இப்பணம் கடனாகப் பெற்று நிவாரண வேலை செய்பவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றதுஎன்று கூறப்படுகிறது இந்தக்கடனை நீர்ப்பாசன இலாகாவிடமிருந்து சமூகசேவா பகுதி பெறுகிறது. இந்த நிதியைப பெற்றுக்கொடுக்க வவனியா மாவட்ட அதிபர் திரு. ஆர். வி. சேனநாயக்காவும் சமூக சேவைப்பகுதி உத்தியோகத்தர் திரு. விஜயரட்ணமும் ஒழுங்குகள் செய்து வருகிறார்கள்.

## நிவாரண வேலைகள்

வடமாகாண நீர்ப்பாசன பொறியியலாளர் திரு. பரமானந்தனும் வவனியா உதவி விவசாய ஆணையாளர் திரு.சி. குலேந்திரனும் கஷ்ட நிவாரண வேலை எடுத்துக் கொடுப்பதில் முழுமுயற்சிமேற்கொண்டு வருகிறார்கள்.

கஷ்ட நிவாரண வேலைகளை வவனியா மக்களுக்கும் கொடுப்பதற்கு மாவட்ட அதிபரும் சமூக சேவைப்பகுதி அதிபரும் ஒழுங்குகள் செய்து வருகின்றனர்.

## 5 லட்சம் ரூபா வழங்கப்பட்டது

வவனியா மாவட்டத்தில் இதுகால வரையும் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 லட்சம் ரூபா சமூகசேவைப பகுதியிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கின்றது. இப்பணம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருளாகவும் பணமாகவும் சேத நிவாரண உதவியாகவும் வழங்கப்பட்டுள்ளது.

இதுதவிர இரண்டரை லட்சம் ரூபா சமூகசேவைபபகுதியிடமிருந்து நிவாரண வேலைகளுக்காகத் தரும்படி வவனியா மாவட்ட அதிபர் திரு. ஆர். வி. சேனநாயக்காவும் சமூக சேவைப்பகுதி உத்தியோகத்தர் திரு. விஜயரட்னமும் கேட்டுள்ளார்கள். இப்பணம் மிக விரைவில் வந்து சேருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இலவச பங்கீட்டரிசி

வவனியா மாவட்டத்தில் உள்ள பாவற்குளம் என்னும் குடியேற்றத்திட்டத்தில் வசிக்கும் மக்களுக்கு நிவாரண வேலை கொடுப்பதில் ஏற்பட்டதாமதத்தால் பட்டினிக் கூக்குரலை வவனியா அரசாங்க அதிபர் சகிக்க முடியாமல் சமூகசேவை அத்தியட்சகர் திரு ஆர். ரி. இரத்தினதுங்காவுடன் இம் மக்களுக்கு மேலும் இருவார காலத்துக்கு இலவச பங்கீட்டரிசியும், உணவுப்பொருள் விநியோகம் செய்யவேண்டுமென்று கேட்டதற்கிணங்க இவ்வாரம் பங்கீட்டரிசியும், உணவுப்பொருள்களும் இலவச விநியோகம் செய்யப்படும்.

இக் குடியேற்றத் திட்டத்திலுள்ள மக்களுக்கு இப் பங்கீட்டரிசி விநியோகஞ் செய்யப்படாவிட்டால் மக்கள் பட்டினிப் பிணியால் அதிகம் பாதிக்கப்படுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## உயிரிழந்தோருக்கு நினைவுக்கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணியின் செயற்குழுக் கூட்டம் நேற்று கட்சிக்காரியாலயத்தில் வாலிபமுன்னணித் தலைவர் திரு. ஆ. ஹென்றி தலைமையில் நடைபெற்றபோது தென்னகத்திலே இந்தி எதிர்ப்பில் தமது உயிரைத் தியாகம் செய்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாகவும் மத்திய அரசாங்கத்தின் இந்தித் திணிப்பைக் கண்டிக்குமுகமாகவும்எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஒரு பொதுக் கூட்டத்தை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

---

## தந்தியின் நத்தை வேகம்

யாழ்ப்பாணம், திங்கள்

தந்தியொன்றின் நத்தை வேகத்தினால், மரணச்சடங்கொன்றில் கலந்து கொள்ள வேண்டிய ஒருவர் கடைசி நேரத்தில்கூட வந்துசேர முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

மீசாலையிலிருந்து வவனியாவுக்குக் கடந்த வெள்ளிக்கிழமை காலை தந்தியொன்று அனுப்பப்பட்டது. ஒருவர் காலமானார் என்றும் அன்று பிற்பகல் மரணச் சடங்கென்றும் அத்தந்தியில் குறிப்பிட்டிருந்தது. ஆனால் அக்கத்தந்தி அடுத்தநாள் பிற்பகல் 2-00 மணிக்குத்தான் உரியவரிடம் போய்ச் சேர்ந்துள்ளது. மீசாலைக்கும் வவனியாவுக்குமிடையே உள்ள தூரம் 90 மைலாகும். ஆனால் தந்தி நத்தைவேகத்தில் போய்க் கிடைத்துள்ளது.

யாழ்ப்பாணத்துக்கும் வவனியாவுக்குமிடையே நேரடி டெலிபோன் லைன் இருப்பது குறிப்பிடத்தக்கது.

---

## மொழிக் கொள்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்து வன்முறைச் செயல்கள் பற்றிக் கண்டித்தார்.

### தேர்தல் ஒத்திவைப்பு

தர்மபுரியில் வருகிற 22-ந் திகதி நடைபெறவிருந்த இடைத்தேர்தலை ஏப்ரல் 10-ந் திகதிக்கு தேர்தல் கமிஷனர் ஒத்திவைத்திருக்கிறார், தி. மு. க., கம்யூனிஸ்டகட்சி பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இத்தேர்தல் ஏப்ரல் 10-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### விசேஷ வழிபாடு

தமிழ்நாட்டில் அமைதி ஏற்படுவதற்காக நாளை சகல ஆலயங்களிலும் விசேஷ வழிபாடு நடைபெறும். ஆச்சார்யா விநோபாஜி கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பிரதம மந்திரி சாஸ்திரி இன்று தனது மந்திரிசபை சகாக்களுடன் 40 நிமிடம் ஆலோசனை நடத்தினர்.

வன்முறைச் செயல்களில் ஈடுபடுபவர்களைக் கண்டவுடன் சுடும் உத்தரவு இன்னும் அமுலில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

---

## நாடகம்

யாழ்ப்பாண பிரதேசக் கலா மன்றத்தின் நாட்டுப்பாடல், நாட்டுக்கூத்துகுழுவினர் ஆதரவில் இன்று 15-2-65 இரவு 7மணி தொடக்கம் 10-30 வரை யாழ். திறந்தவெளியரங்கில் யாழ். நகர முதல்வர் அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணம் நாட்டுக்கூத்துக் கலைஞரும் அண்ணாவிமார்களும் ஒருங்கு சேர்ந்து நடிக்கும்,

நீலகண்டன் அல்லது தேவ சகாயம்பிள்ளை என்னும் உண்மைச் சரிதை நாடகத்தைக் காணத்தவறாதீர்கள்.

தயாரிப்பாளர்:ம.யோசேப்பு (பூந்தான்) 1608

## மரண அறிவித்தல்

### இரத்தினம்மா

காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளையின் அருமைப் பாரியார் இரத்தினம்மா அளவெட்டியில் காலமாகிவிட்டார். இவர் உணவு இலாகா ராஜரத்தினம், மனோன்மணி, யாழ். அரசினர் ஆஸ்பத்திரியை சேர்ந்த நேசமணி,ராசமணி, மானிப்பாய் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த ருக்மணி ஆகியோரின் அருமைத் தாயாரும், தொழில் இலாகா குமரேசு, ஏழாலை திருச்சபை வணக்கத்துக்குரிய சாம் தம்பு, திருமதி கனகவல்லி ராஜரத்தினம் ஆகியோரின் அருமை மாமியாருமாவர். தகனம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகம் சேமக்காலையில் நடைபெறும். 158